வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்
ந.க.எண்.2932/ஆ5/2023, நாள். 04.08.2023

.....

பொருள் பள்ளிக் கல்வி – கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம் – வேலூர் மாவட்டம் – மகளிர் உரிமைத் திட்டம் செயல்படுத்துதல் – இரண்டாம் கட்டமாக விண்ணப்ப பதிவு மேற்கொள்ளும் முகாம்கள் நடைபெறும் பள்ளிகள் அனைத்து விடுமுறை நாட்களிலும் பள்ளிகள் திறந்து வைக்க –தெரிவித்தல் – தொடர்பாக

பார்வை வேலூர் மாவட்ட ஆட்சியரின் கடித ந.க.எண்.அ1/380/2023, நாள். 02.08.2023

.....

தமிழக அரசால் கலைஞர் மகளிர் உரிமைத் திட்டமானது வருகின்ற செப்டம்பர் 15–ம் தேதி முதல் செயல்படுத்தப்பட உள்ளது. வேலூர் மாவட்டத்தில் கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம் செம்மையாக நடைமுறைபடுத்தும் பொருட்டு, விண்ணப்பங்கள் பதிவு செய்யும் முகாம்கள் நடத்த இடங்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளன. வேலூர் மாவட்டத்தில் இரண்டாம் கட்டமாக பதிவு முகாம்கள் 05.08.2023 முதல் 16.08.2023 வரையில் நடைபெற உள்ளது எனவும், முகாம்கள் நடைபெறும் மாநகராட்சி, நகராட்சி, மற்றும் ஊராட்சி பள்ளிகள் அனைத்தும் விடுமுறை நாட்கள் உட்பட அனைத்து நாட்களில் தினசரி காலை 8.00 மணிக்கு பள்ளிகள் திறந்து வைக்க பார்வையில் காணும் வேலூர் மாவட்ட ஆட்சியரின் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே இப்பொருள் சார்பாக விண்ணப்ப பதிவுகள் மேற்கொள்ளும் முகாம்கள் நடைபெறும் அனைத்து நாட்களிலும் பள்ளி வளாகங்களை திறந்த வைக்கவும், மேலும் எவ்வித புகாருக்கும் இடமளிக்காமல் செயல்பட சம்மந்தப்பட்ட பள்ளி தலைமையாசிரியர்களுக்கு தெரிவிக்கப்படுகிறது.

முதன்மைக் கல்வி அலுவலர்,
வேலூர்.

04.08.23

பெறுநர்.
சம்மந்தப்பட்ட பள்ளி தலைமையாசிரியர்கள்,
வேலூர் மாவட்டம்.

நகல்.

1. வேலூர் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுக்கு தகவலுக்காக பணிந்து அனுப்பப்படுகிறது.
2. வேலூர் மாவட்டக் கல்வி அலுவலர்கள், (இடைநிலைக் கல்வி / தொடக்கக் கல்வி) வேலூர் மாவட்டம்.
(தொடர் நடவடிக்கை மேற்கொள்ளும் பொருட்டு அனுப்பப்படுகிறது)